ISSN 1391-9504

பருவ வெளியீட்டுப் பிரிவு
யாழ்ப்பாண பொதுநூலகம்

# விஜய்

Vijey விஜய்

17.02.2016 - மலர் 12, இதழ் 51



## நுளம்புகளினால் பரவும் 'சிகா' வைரஸ்



## எதிர்கால குறுந்தூர வாகனம்



## கேகாலை பறவைகள் சரணாலயம்



நெக்டோ போத்தல்களை பரிசாக தரும்....



நெக்டோ பென்ச்சாவின் கதை

(5ஆம் பக்கம்)

விலை ரூபா 15/-


மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்கள் என்ன செய்கிறார்கள்?




இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக






1. இங்கு காணப்படுபவற்றில் நிலத்தில் ஊர்ந்து செல்லக்கூடியவை எவை?

...........................................................................



2. படத்தில் காணப்படும் பறக்கும் இயல்புடைய உயிரினங்களைக் குறிப்பிடுக.

.......................................

.......................................

3. பூனையைக் கண்டால் ஓடி ஒளியும் பிராணி எது?

.......................................

4. கெரட்டை விரும்பி உண்ணும் பிராணி எது?

.......................................

1. படத்தில் காணப்படும் இருவரும் நமக்குப் பயன் தரும் செயல் ஒன்றில் ஈடுபட்டுள் ளனர். அந்த செயலைக் குறிக்கும் பொருத்தமான வாக்கியம் யாது?

   1. மரக்கன்று ஒன்றைப் பிடுங்கி அழிக்கின்றனா்
   2. மரங்களுக்கு நீர் பாய்ச்சுகின்றனா்
   3. மரக்கன்று ஒன்றை நட்டு அதற்கு நீர் பாய்ச்சுகின்றனா்



2. இங்கே வண்ணப் .............. கீச்சிட்டவாறு பறந்து திரிகின்றன.

   (பூச்சிகள்/ மீன்கள்/ பறவைகள்)

3. பாதங்களைப் பாதுகாப்பதற்காக இவர்கள் அணிந்திருப்பவை யாவை?

   1. தொப்பிகள் 2. ஆடைகள் 3. பாதணிகள்

4. மரக்கன்று ஒன்றை நாட்டிய பின்னர் அதன் வளர்ச்சிக்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

...........................................................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெப்ரவரி-௨௧

# சர்வதேச தாய்மொழி தினம்

'ஒருவரோடு நீங்கள் உரையாடும்போதோ அல்லது கருத்துப் பகரும் போதோ, அவருக்குத் தெரிந்த ஏதேனுமொரு மொழியில் அந்த தொடர்பாடல் அமையுமாயின், நீங்கள் கூறுவதை அவர் விளங்கிக்கொள்வார். அதுவே, அவரது தாய்மொழியில் நீங்கள் அவருடன் உரை யாடினால், அது அவரது இதயத்தைத் தொடும்.' இது மொழியியல் நிபுணர் களால் நீண்ட ஆய்வுக்குப் பின் வெளியிடப்பட்ட ஒரு கருத்தாகும்.

'ஒருவர் தனது வாழ்வில் முதன்முதலில் பேசப்பழகும் மொழியே தாய்மொழி ஆகும்' எனவும், 'ஒருவரின் சுதேச மொழியே தாய்மொழி ஆகும்' எனவும் தாய்மொழிக்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. ஆக, தாய்மொழியின் மகிமையையும் தாய்மொழி தொடர்பாக ஒவ்வொருவருக்கும் இருக்கும் உரிமையையும் உலகுக்கு வெளிப்படுத்தும் வகையில்தான் 'சர்வதேச தாய்மொழி தினம்' பிரகடனப்படுத்தப் பட்டது.





விஜய
Vijey
வீஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652


## சர்வதேச தாய்மொழி தினம் உருவான வரலாறு

1947 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் சுதந்திரத்தின் பின்னர், இந்தியாவுக்கு மேற்கே இருந்த பகுதி 'மேற்கு பாகிஸ்தான்' என்றும், கிழக்கே இருந்த பகுதி 'கிழக்குப் பாகிஸ்தான்' (இன்றைய பங்களாதேஷ்) என்றும் அழைக்கப்பட்டு, ஒரே பாகிஸ்தானாக மேற்கு பாகிஸ்தானின் நிர்வாகத்தின்கீழ் இருந் தது. மேற்கு பாகிஸ்தா னில் வாழ்ந்த பெரும்பா லானோர் உருது மொழி யையே பேசினர். கிழக்குப் பாகிஸ்தானில் வாழ்ந்த பெரும்பாலானோரின் தாய்மொழி வங்காள மொழி (Bengali Language) ஆகும்.

ஆனால், பாகிஸ்தான் அரசு மேற்கிலும் கிழக்கிலும் உருது மொழியையே அரச கரும மொழி யாகப் பிரகடனம் செய்தது. இதனை எதிர்த்து கிழக்குப் பாகிஸ்தானியர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். தமது தாய்மொழி வங்காள மொழி என்பதால், வேறு மொழியான உருது மொழியை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என அவர்கள் போராடினர். இப்போராட்டத்தின் ஒரு கட்டமாக, 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அன்றைய கிழக்குப் பாகிஸ்தானின் டாக்கா பல்கலைக் கழக மாணவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டமொன்றின்போது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கு இலக்காகி பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு பேர் உயிரிழந்தனர்.

1971 இல் பங்களாதேஷ் தனிநாடாக சுதந்திரம் பெற்றது. அங்கு வங்காள மொழி அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இதனைய டுத்து, 1952 ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தின்போது உயிரி ழந்த மாணவர்களை நினைவு கூரும் முகமாகவும் உலகில் உள்ள பல்வேறுபட்ட கலாசா ரங்கள் குறித்து உலக மக்க ளுக்கு அறிவூட்டல் மற்றும் அந்தந்த மொழிகளைப் பாதுகாத்தல் போன்ற நோக்கங் களுக்கு அமையவும் 1999 நொவெம்பர் 17 ஆம் திகதி இடம்பெற்ற யுனெஸ்கோ மாநாட்டின்போது, பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக யுனெஸ்கோ நிறுவனம் பிரகடனப்படுத்தியது.




அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் ஏஷ்ஃபீல்ட் பூங்காவில் நிறு வப்பட்டுள்ள நினைவுத்தூபியொன்று



1952 ஆர்ப்பாட்டத்தின்போது, உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்களை நினைவுகூரும் முகமாக பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நிறுவப்பட்டுள்ள நினைவுத்தூபி. இதனை 'ஷஹீட் மினார்' என்று அழைப்பர்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பசி தணிக்கும் பழம்

ஓர் ஊரில் அதிசயப் பழங்கள் இருந்தன. அதனை உண்டால் நெடுநாளைக்குப் பசியே எடுக்காது. இதனை துறவி ஒருவர் அறிந்துகொண்டு, அவ்வூரை நோக்கிப் பயணித்தார். ஆனால் அந்த ஊருக்குப் போன அவருக்கு, அங்குள்ள சந்தையில் அந்தப் பழம் இருப்பதாகத் தெரியவில்லை, தயங்கியபடியே பழங்கள் ஏதாவது இருக்கின்றனவா? என பார்த்துக்கொண்டே சென்றார்.

இதனை அவதானித்த ஓர் இளைஞன், துறவியிடம் வந்து ''நீங்கள் எதையோ தேடுவது போல தெரிகிறது. நான் உங்களுக்கு உதவலாமா?'' என்று கேட்டான். அதற்கு துறவி 'இந்த ஊரில் அபூர்வமான பழம் ஒன்று கிடைக்கும் என்றார்கள் அதை உட்கொண்டால் சில நாட்கள் வரை பசியே எடுக்காது என்றும் சொன்னார்கள். அந்தப் பழம் கிடைத்தால் அல்லது அதன் விதை கிடைத்தால் அதைக் கொண்டு பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவமுடியுமா? என்று பார்க்கிறேன்' என்று பதில் சொன்னார்.

இளைஞன் உடனே பரபரப்புடன் ''சற்று இருங்கள், வருகிறேன்'' என்று கூறிவிட்டு புறப்பட்டுப் போனான். சிறிது நேரம் கழித்து திருப்பி வந்தான். அவன் கையில் ஒரு பழம் இருந்தது. 'நீங்கள் கேட்ட பழம் இதுதான் இதனை எடுத்துகொள்ளுங்கள்' என்று கூறி அதை துறவியிடம் கொடுத்தான் 'இந்த ஊரில் இந்தப் பழம் நிறையவே கிடைக்கும் என்று சொன்னார்களே' என்று கேட்டார் துறவி.

''உண்மைதான் இந்த ஊரில் இந்தப் பழம் நிறையத் தான் கிடைத்துக்கொண்டு வந்தது. ஆனால், மக்கள் சுயநலவாதிகளாக மாறிவிட்டார். தாம் அனுபவிக்கும் பலனை பிறர் யாரும் அனுபவிக்கக்கூடாது என்ற சுயநல நோக்கில் இந்தப் பழத்தைப் பதுக்க ஆரம்பித்து விட்டார்கள். இதை பயிரிடும் முறையையும் மிக ரகசியமாக வைத்துக்கொண்டார்கள். இப்போது என் தந்தை வைத்திருந்த பழத்தை தான் தங்களுக்கு கொடுத்தேன். இதனைக் கொண்டு பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவவப் போவதாக அறிந்தவுடன் தங்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது'' என்று சொன்னான் அந்த இளைஞன்.

அவனுடைய செயலாலும், சொற்களாலும் மகிழ்ந்த துறவி, அவனை வாழ்த்தினார். ''உன்னைப் போல பிறருக்காக உதவ முன்வரும் இளைஞர்கள் பெருகினால் எப்பகுதியிலும் யாருக்கும் எந்தக் குறையும் இருக்காது'' என்று கூறி விடைபெற்றார் துறவி.

நீதி: பிறரின் மகிழ்வுக்காகப் பாடுபடுவதே உயர்ந்த குணமாகும்


# பிரார்த்தனை

ஒரு ஊரில் ராமு, விமல் எனும் இரு இளைஞர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இருவரும் வசதியில் வேறுபட்டவர்கள். ஆனால் ஒரே நிறுவனத்தில் பணிபுரியும் சூழ்நிலையால் நண்பர்கள் ஆனார்கள். அவர்கள் ஒரு நாள் உல்லாசக் கப்பல் ஒன்றில் சென்றபோது, கடலில் அடித்த புயலினால் கப்பல் உடைந்தது. அந்த ஆபத்தில் இருந்து நீந்தி வந்து அருகில் உள்ள ஒரு சிறிய தீவை சென்றடைந்தனர்.

அந்த தீவில் வெறும் புற்களும் புதர்களும் மட்டுமே இருந்தது. சாப்பிட நிழலுக்காக ஒதுங்க ஒரு மரம் கூட இருக்கவில்லை. அவர்களுக்கு என்ன செய்வது என்பதே தெரியவில்லை. அதனால் இருவரும் கடவுளைப் பிரார்த்தனை செய்ய முடிவெடுத்தனர். அதனால் இருவரும் பிரிந்து இருகரைகளிலும் தங்கினார்கள்.

முதலில் இருவரும் உணவுக்காக பிரார்த்தனை செய்தனர். அவர்களின் பிரார்த்தனைப்படி ராமு இருந்த பகுதிக்கு சில பழங்கள் மிதந்து வந்தன. அவன் அதனை சாப்பிட்டான். ஆனால் விமலுக்கோ எதுவும் கிடைக்காமல் பசியோடு வாடினான். இப்படியே ஒரு வாரம் கழிந்தது. ராமு நன்கு பழங்களை உண்டு மகிழ்வுடன் இருந்தான். ஆனால் விமல் பசியோடு இருந்து உருக்குலைந்து போனான்.

ராமுவிற்கு தன் வீடு செல்லும் எண்ணம் தோன்றியதும் அதனால் ஒரு படகுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்த போது படகும் அடுத்த நாளே கரை ஒதுங்கியது. ராமு தனது பிரார்த்தனையின் சக்தியினைக் கண்டு மகிழ்ந்த அதே சமயம் தனது நண்பனான விமலின் துரதிஷ்டத்தை எண்ணிக் கொண்டே படகில் ஏறி அந்த தீவை விட்டு செல்ல ஆயத்தமானான்.



அப்போது, வானத்தில் இருந்து ஒரு அசரீக் குரல் ஒன்று ''ஏன் உன் நண்பனை தனியாக இந்த தீவில் விட்டுச் செல்கிறாய்?'' என்று கேட்டது.

அதற்கு ராமு ''நான் கடவுளிடம் பிரார்த்தனை செய்தேன். அவர் என்னை ஆசீர்வதித்து இவை அனைத்தும் எனக்கு மட்டும் கிடைக்கச் செய்தார். என் நண்பனின் பிரார்த்தனை ஒன்றுக்கும் கூட கடவுள் செவி சாய்க்கவில்லை அவன் ஒன்று கூட பெறத் தகுதியில்லாதவன் என்று சொன்னார்.''

அதற்கு அந்த குரல் ''மகனே நீ நினைப்பது தவறு. நான் தான் கடவுள் உன்னை உயிராக நேசிக்கும் உன் நண்பன் பிரார்த்தனையில் ஒன்றே ஒன்று மட்டும் கேட்டான். நான் அந்த ஒரு பிரார்த்தனையை நிறைவேற்றி வைத்தேன் என்றார்.

''என்ன கேட்டான் அவன் பிரார்த்தனையில்? அவனுக்கு நான் ஏதாவது கடமைப்பட்டுள்ளனா?'' என்றான் ராமு.

''உன் நண்பன் பிரார்த்தனையில் என் நண்பன் மிகவும் வசதியானவன் நல்லவன் வாழ்க்கையில் கஷ்டமே அறியாதவன் ஆகவே என் பிரார்த்தனையெல்லாம் அவன் வேண்டுவதை மட்டும் நிறைவேற்றுங்கள் அதுபோதும் என்று தான் வேண்டினான்.'' இதைக் கேட்ட ராமு வெட்கித் தலைகுனிந்தான். மனந்திருந்தி தன் நண்பனைத் தேடி ஓடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'ஆட்சி' பற்றிய எண்ணக்கருவானது, மனிதனால் முதன்முதலாக கோத்திர சமூகத்திலேயே பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. பலம் படைத்த ஒருவனுக்கே கோத்திர சமூகத்தின் தலைமைத்துவம் கிடைத்தது. இச்சமூகம் விரிவடைந்து அரசுகள் உருவாகின. இதன்போது, பலம் படைத்த ஒருவருக்குத்தான் அதிகாரங்கள் இருந்தது. பின்னர் பல்வேறு குழுவினர் அரச பரம்பரையினராக தம்மை அமைத்துக்கொண்டனர். இவர்களே, ஆட்சி அதிகாரத்தை பொறுப்பெடுத்துக் கொண்டனர். மன்னராட்சி என எல்லா சந்தர்ப்பங்களிலும் மன்னனின் தலைமையில் ஆளப்பட்டது. நாட்டின் உரிமையும் சட்டமும் மன்னர் வசம் இருந்தது.

அது மட்டுமன்றி, மன்னர்கள், பேரரசுகள் வரை தமது ஆட்சி அதிகாரத்தை விரிவடையச் செய்தனர். எனினும், எல்லா சந்தர்ப்பங்களிலும் நாட்டின் ஆட்சியானது, மன்னனினதும் உயர் வர்க்கத்தினரினதும் நன்மைக்காகவே நடைபெற்றது. இதனால், சாதாரண பொதுமக்களை அடிமைகளாகவும் வரி அறவிட்டும் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தி ஆட்சியை நடத்தினர். இதனால், நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களாலும் கிளர்ச்சிகளாலும் மன்னனை தோற்கடித்து மக்கள் வெற்றிபெற்று ஜனநாயக ஆட்சிமுறை மலர்ந்தது.

ஜனநாயகம் எனும் ஆட்சி எண்ணக்கரு இன்று உலகெங்கும் வியாபித்துள்ளதோடு, அதன் பல்வேறு வடிவங்களை நம்மால் காண முடிகின்றது.



## ஜனநாயகம் என்பது

ஜனநாயகம் என்ற சொல்லில் 'ஜனம்' (சனம்) என்பது ஏதோ ஒரு பிரதேசத்தில், வாழும் மக்கள் கூட்டத்தினர் ஆவர். 'நாயகம்' என்பது தலைமையைக் குறிக்கும். எனவே, மக்களை தலைமையாகக் கொண்ட ஆட்சிமுறையே ஜனநாயக ஆட்சி முறையாகும்.

## ஜனநாயக ஆட்சிமுறையின் வரலாறு

ஜனநாயகம் முறையானது ஜீன் ஜெக் வின் ரூஸோ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு எண்ணக்கருவாகும். ஆனால், ரூஸோவின் காலத்திற்கு முன்பே புராதன கிரேக்கத்தின் அதென்ஸ், ஸ்பாட்டா நகரத்தில் ஜனநாயகம் நிலவியது. ஜனநாயகத்தின் தாயகம் என கருதப்படும் கிரேக்கத்தின் நகராட்சிகள் மக்களின் நேரடி பங்குபற்றுதல் மூலமே ஆட்சி செய்யப்பட்டன. குறிப்பாக, இந்த நகரங்களின் ஆட்சி குறித்து, மக்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

அதேபோல் இலங்கையின் வரலாற்றில்கூட சில சந்தர்ப்பங்களில் ஜனநாயக ஆட்சி முறை நடைமுறையில் இருந்துள்ளது. கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பண்டுகாபயன் மன்னன் காலத்தில் கிராம ஆட்சிக்காக நியமிக்கப்பட்ட 'கமிக' எனும் ஆட்சியாளனை தெரிவுசெய்யும் அதிகாரம் கிராம மக்களுக்கே வழங்கப்பட்டது.

அதுமட்டுமல்ல அரசாட்சியின்போது, மன்னரால் மக்களின் கருத்துக்களை கேட்டுத் தெரிந்துகொண்டு அதன்படி ஆட்சிபுரிந்த சந்தர்ப்பங்களும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"தற்பொழுது அதிகமான நாடுகளில் ஜனநாயகமானது, மறைமுக ரூபத்திலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்படி, மக்களின் பிரதிநிதிகள் மக்களின் வாக்குகளால் நியமிக்கப்படுகின்றனர். ஒரு தேர்தல் மூலம் குறிப்பிட்ட காலகட்டத்திற்காக ஆட்சியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். பெரும்பான்மை மக்களின் விருப்பத்தின்படி ஆட்சியாளர்கள் நியமிக்கப்படுவர். நாட்டின் பிரஜைகள் வாக்காளர்களாக ஆட்சிக்கு பொருத்தமானவர்களை தெரிவுசெய்யும் பொருட்டு தமது வாக்குகளைப் பயன்படுத்துவர்"

## நேரடி ஜனநாயகம்

முழு மக்களையும் ஓரிடத்தில் கூட்டி அவர்களுடன் கலந்துரையாடி அதன்மூலம் ஆட்சி முறைமையில் தீர்மானங்களை எடுக்கும் முறையே நேரடி ஜனநாயகம் ஆகும். தற்காலத்தில் இத்தகைய முறை நடைமுறையில் இல்லை. ஏனெனில், இப்பொழுது சனத்தொகையோ மிக அதிகம். இதற்குப் பதிலாகத் தான் பிரதிநிதித்துவ ஜனநாயகம் மலர்ந்தது.

## பிரதிநிதித்துவ ஜனநாயகம்

மக்கள் நேரடியாக தொடர்புபடாது அவர்களுக்காக அவர்களின் விருப்பப்படி பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு ஆட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதே பிரதிநிதித்துவ ஜனநாயக முறையாகும். இதில் மக்கள் மறைமுகமாக சம்பந்தப்படுவதால் இதனை மறைமுக ஜனநாயகம் என்றும் அழைப்பர்.

தற்பொழுது அதிகமான நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயகமே நடைமுறையில் உள்ளது. இதன்படி தேர்தலின்மூலம் குறிப்பிட்ட காலகட்டத்திற்காக பெரும்பான்மை மக்களின் வாக்குகளுக்கு அமைய மக்களின் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர். இதன்போது மக்கள் ஆட்சிக்குப் பொருத்தமானவர்களை தெரிவுசெய்யும் பொருட்டு தமது வாக்குகளைப் பயன்படுத்துவர்.

## பொதுசன அபிப்பிராயம்

அரசியலமைப்பு தொடர்பாகவோ சட்டம் குறித்த காரணங்களுக்காகவோ மக்களின் கருத்தினை அறிந்துகொள்வதற்கு பயன்படுத்தும் ஒரு முறையே பொதுஜன அபிப்பிராயமாகும். இலங்கை மற்றும் பிரான்சில் இத்தகைய முறை நடைமுறையில் உள்ளது.

## ஒப்பங்கோடல்

ஏதாவதொரு சட்டத்தை விதிக்கும்படி கேட்பதற்கான மக்களின் உரிமையையே ஒப்பங்கோடல் என அழைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகமானோரின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் ஜனநாயகம்



## சமூக ஒப்பந்தம்

சமூக ஒப்பந்தம் என்பது மக்களுக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் தகுதியற்றவர்களாயின் அவர்களை பதவியில் இருந்து நீக்குவதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமைகளாகும்.

## மக்கள் கருத்து

சிற்சில அரசியல் முரண்பாடுகளின்போது, அதனை தீர்ப்பதற்காக மக்களின் கருத்துக்களை கேட்டறிவதே மக்கள் கருத்தாகும்.

## ஜனநாயக ஆட்சிமுறையின் லட்சணம் (தன்மை)

**சுதந்திரமும் நீதியுமான தேர்தலை நடாத்துவது:**

நாட்டிற்கு அரசொன்றை நிறுவுவதற்கும் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கும் தேர்தல் நடாத்துவது ஜனநாயக ஆட்சி முறையொன்றின் அடிப்படை லட்சணமாகும். இதன்மூலம் மக்களின் விருப்பத்தை வெளியிட சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்கின்றது.

**நாட்டு தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படல்:**

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அதன் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன. இதனை தொகுதி நிர்ணய ஆணைக் குழுவே தீர்மானிக்கின்றது.

**போட்டி கட்சிமுறை நிலவுதல்:**

ஜனநாயக ஆட்சிக்காக போட்டிமுறையிலான பல கட்சிகள் இருப்பது அவசியமாகும். அரசியல் கட்சி என்பது கொள்கைகளின் அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்டு ஆட்சி அதிகாரத்தை பெறுவதற்காக அமைக்கப்பட்ட குழுவாகும். தனக்கே உரித்தான தனித்துவமான கொள்கைகளுடன் இயங்கக்கூடிய கட்சிகளுக்கு பெயர், நிறம், சின்னம் என தனித்தனியாக இருக்கும்.

**ஒரு கட்சி முறை:**

ஒரே கட்சியே சில நாடுகளில் நிலவும். இதற்கமைய சீனா, வட கொரியா, கியூபா போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்கது.

**இரு கட்சி முறை:**

நாட்டில் ஆட்சி அதிகாரம் இரு முக்கிய கட்சிகளுக்கிடையே மட்டுமே மாறி மாறிக் கிடைப்பதே இரு கட்சி முறை ஆகும்.

இம்முறை அதிகம் அபிவிருத்தியடைந்த நாடுகளில் கணலாம்.

**பல கட்சி முறை:**

சில நாடுகளில் பல கட்சிகள் செயல்படும் அதிக விருப்பு வாக்குகளின்படி ஆட்சி அமைக்கப்படும். எனினும், கட்சிகள் பல இருப்பதால் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பங்கினரின் விருப்பத்தை பெற்ற கட்சிகள் ஒன்று கூடி கூட்டணி ஆட்சியே பெரும்பாலும் நடைபெறும்.

**சர்வசன வாக்குரிமை:**

மக்களின் பிரதிநிதிகள் நியமிக்கப்படும்பொழுதும் தேர்தல் நடாத்தப்பட்டு அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர்கள் நாடாளு மன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள். எனவே, இங்கு ஒரு தேர்தல் மூலம் மாத்திரமே அரசாங்கம் அமைக்கப்படுகின்றது.

**உரிமைகளுக்கும் சமத்துவத்திற்கும் மதிப்பளித்தல்:**

சுதந்திரம், உரிமை, சமத்துவம் என்பன நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் ஒரே விதமாக கிடைக்க வேண்டியது அடிப்படை ஜனநாயகமாகும். ஒரு ஜனநாயக நாட்டில் இனம், மதம், சாதி அடிப்படையில் வெவ்வேறான முறையில் சலுகைகளை வழங்க முடியாது.

-இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி -II)

பெயர்: ........................................................

01) பின்வரும் பாடலைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இலங்கை நாடு எம் நாடு
இதுவே எமது தாய்நாடு
அழகு மலைகள் நிறைநாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு

மழைவளமுள்ளது எம் நாடு
மண்வளமுள்ளது எம் நாடு
இரு மொழியும் சிறந்து விளங்குவது எம் நாடு
இந்திய நாடெம் அயல்நாடு
இந்து சமுத்திரம் சூழ் நாடு

1. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள இரு நாடுகள் எவை?
   ....................................................................
2. இப்பாடலில் உள்ள இயற்கை வளங்கள் இரண்டு தருக.
   ....................................................................
3. இலங்கை நாட்டின் அயல் நாடு எது?
   ....................................................................
4. இந்நாட்டின் முக்கிய மொழிகள் எத்தனை?
   ....................................................................
5. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொல் தருக.
   1. அழகு : ..........................................................
   2. ஆறு : ..........................................................
6. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொல் தருக.
   1. நாடு : ..........................................................
   2. இது : ..........................................................

02) பின்வரும் கருத்துக்கு ஒத்த பழமொழி ஒன்று தருக.

1. சிறு உதவி செய்தவரையேனும் மறத்தல் கூடாது.
   ....................................................................
2. இளமையில் கற்கும் கல்வியே மிகவும் பயனுடையது.
   ....................................................................

03) பின்வரும் மரபுத் தொடர்கள் உணர்த்தும் பொருளை எழுதுக.

1. காது குத்துதல்: ..........................................................
2. உச்சி குளிர்தல்: ..........................................................

04) பின்வரும் வாக்கியங்களின் கருத்தை ஆங்கிலத்தில் தருக.

1. தயவுசெய்து தினமும் பாடசாலைக்கு வாருங்கள்.
   ....................................................................
2. தயவுசெய்து வகுப்பை துப்புரவு செய்யுங்கள்.
   ....................................................................

05) சொற்களை ஒழுங்காக்கி கருத்துள்ள வாக்கியம் அமைக்க.

1. உலகில்/ மொழி/ சீனமொழி/ அதிகமானோர்/ ஆகும்/ பேசும்
   ....................................................................
2. சுத்தமும்/ சந்தோஷத்திற்கு/ வழிவகுக்கும்/ ஆரோக்கியமும்
   ....................................................................




★ வினாக்களுக்கு சரியான விடையை கோடிட்ட இடத்தில் எழுதுக.


06) பூவும் என்பதன் பன்மைச் சொல்லை தருக. ..........................................

07) ஏற்றத்தாழ்வு என்பதை பிரித்தெழுதுக. ..........................................

08) இன்பம்+துன்பம் என்பதை சேர்த்தெழுதுக. ..........................................

09) 250g சீனியின் விலை ரூபா 22.50 ஆகும். 2.5kg சீனியின் விலை யாது?

....................................................................


10) 


இவ்வுருவின் சுற்றளவு யாது?

....................................................................

11) 8m 40cm நீளமான கம்பி ஒன்றிலிருந்து 2m 10cm நீளமான கம்பித் துண்டுகள் எத்தனை வெட்டலாம்?

....................................................................

12) 


அருகிலுள்ள உருவில் நிறம் தீட்டப்பட்டுள்ள உருவின் பரப்பளவு யாது?

....................................................................

13) சுருக்குக. 1.7l 280ml + 55ml = ..........................................

14) மிகப் பெரிய எண் யாது? $\frac{7}{10}, \frac{1}{4}, \frac{1}{2}$ = ..........................................

15) ஒரு மண்டபத்தில் மஞ்சள், பச்சை, சிவப்பு என்ற தொடரில் பலூன்கள் கட்டப்பட்டன எனின், 46 ஆவது பலூன் என்ன நிறமாக இருக்கும்?

....................................................................

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி -I)


(பெப்ரவரி 10 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 1 | 04. 2 | 07. 2 | 10. 1 | 13. 1 |
| 02. 4 | 05. 3 | 08. 3 | 11. 1 | 14. 3 |
| 03. 1 | 06. 2 | 09. 1 | 12. 3 | 15. 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனாமா

மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ள பனாமா நாட்டினை ஸ்பானியர்கள் முதன்முதலாக கண்டுபிடித்து, அதனை ஆட்சி செய்து வந்தனர். அதனைத் தொடர்ந்து 1821 இல் கொலம்பியா, ஈக்வடோர் மற்றும் வெனிசுவெலா ஆகிய நாடுகளுடன் இணைந்து 'கிரேன் கொலம்பியா' என்ற பெயரில் மாபெரும் நாடாக உருவாகியது. அது மட்டுமன்றி 1903 இல் பனாமா அமெரிக்காவுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் பனாமா கால்வாய் வெட்டப்பட்டது.




# மின்சார அனர்த்தங்களை தவிர்ப்போம்

வீட்டில், சுற்றுப்புறத்தில், பாடசாலையில் ஆகிய இடங்களில் மின்சார அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? இவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வது தொடர்பான சுவரொட்டியொன்றை வடிவமைத்து பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வெல்லுங்கள்.

## நாடளாவிய சுவரொட்டி (போஸ்டர்) போட்டி...!



வீட்டில், சுற்றுப்புறத்தில் அல்லது பாடசாலையில் ஏற்படக்கூடிய மின்சார அனர்த்தங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? மின்சார அனர்த்தங்களிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கு நாம் அனைவரும் தெளிவு பெறல் வேண்டும். அத்துடன் அவற்றை தவிர்ப்பதற்கு, அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் நம் அனைவரதும் கடமையாகும்.



**இப்போட்டியில் தரம்: 6, 7, 8, 9, 10-11 என 5 பிரிவுகளின் கீழ் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.**

### சகல பிரிவுகளிலும் வெற்றி பெறுவோரில்...

முதலாவது இடத்திற்கு - ரூ 20,000
இரண்டாவது இடத்திற்கு - ரூ 15,000
மூன்றாவது இடத்திற்கு - ரூ 10,000

நான்காவது இடம் தொடக்கம் பத்தாவது இடம்வரை பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள். ஒவ்வொரு பிரிவிலும் தலா சிறந்த 200 சித்திரங்கள் வீதம் என 05 பிரிவிலும் மொத்தமாக தெரிவாகும் 1000 சித்திரங்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

### சித்திரத் தலைப்பு

மின்சார அனர்த்தத்தை பிரதிபலிக்கச் செய்கின்ற அல்லது அதிலிருந்து பாதுகாப்பைப் பெறுவது தொடர்பாக எடுத்துக்காட்டுகின்ற எந்தவொரு கருத்தையும் உங்கள் படைப்பிற்கு தலைப்பாகக் கொள்ள முடியும்.

### போட்டி விதிமுறை/ நிபந்தனைகள்

* தலைப்பின் கீழ் ஒருவர் ஆகக்கூடியது 03 படைப்புகளை மாத்திரமே அனுப்ப முடியும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் அனைத்து சுவரொட்டிகள் (போஸ்டர்கள்) 18—14 அங்குலம் அளவுடையதாக இருத்தல் வேண்டும்.
* பெஸ்டல் அல்லது நீர்ச்சாயம் போன்ற கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு நிறப் பூச்சையும் பயன்படுத்த முடியும்.

சித்திரத்தின் பின்புறம் போட்டியாளரின் பெயர், பாடசாலை, பாடசாலை முகவரி, வகுப்பு, பிறந்த திகதி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், மாவட்டம் மற்றும் மாகாணம், கையொப்பம் ஆகியன போன்ற விபரங்கள் அடங்கலாக பாடசாலை அதிபரின் அல்லது பிரிவுத் தலைவர் அல்லது வகுப்பு பொறுப்பாசிரியரின் உறுதிப்படுத்தல் அடங்கலாக கீழ்காணப்படும் முகவரிக்கு தபாலிட வேண்டும். அல்லது நேரில் வந்து கையளிக்கவும் முடியும்.
(தயவு செய்து உங்கள் விரபங்களை தெளிவாக எழுதுங்கள். ஆங்கிலத்திலும் எழுதினால் நல்லது)

**போட்டி நடுவர் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.**

**போட்டி முடிவுத் திகதி: 29.02.2016**
**பரிசளிப்பு தினம்: மே மாதத்தில்...**

சித்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
மின்சார அனர்த்த பாதுகாப்பு,
'விஜய்'
த.பெ.இல - 2037
கொழும்பு

* மேலதிக விபரங்களுக்கு
எஸ்.கிருஷானந்த் - 0779900344

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகரத்தின் மத்தியில் ஒரு புகலிடம் பறவைகள் சரணாலயம்









கேகாலை பறவைகள் சரணாலயம் கேகாலை நகரில் உள்ள பண்டாரநாயக்க எனும் இடத்தின் கேகாலை மகளிர் கல்லூரிக்கு எதிர்ப்புறமாக சிறிது தூரத்தில் அமைந்துள்ளது. இதனை 1941 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட 8724 எனும் இலக்கமிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்மூலம் சரணாலயமாக பிரகடனப்படுத்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து 1992 ஆம் ஆண்டு முதல் இதன் நிர்வாகம் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ளது.

இலங்கை சூழல் ஆய்வுக் கழகத்தால் இச்சரணாலயம் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்ட போது இங்கு 120 மாறுபட்ட வகையான தாவரங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தாவரங்களில் 25 வகையான தாவரங்கள் இலங்கைக்கு மாத்திரம் உரித்தானதாகும். அதுமட்டுமன்றி, இங்குள்ள 73 வகை பறவை இனங்களில் 12 வகை இலங்கைக்கு மாத்திரம் உரித்தானதாகும் என வனப் பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன், வண்ணாத்துப்பூச்சி வகைககள் மாத்திரம் 77 வகையானவை காணப்படுகின்றன. இவற்றில் இலங்கைக்கு மாத்திரம் உரித்தான 9 வகையான வண்ணத்துப்பூச்சிகளை இங்கு காணலாம். 10 வகையான ஈரூடகவாழிகளும் 11 வகையான நத்தைகளும் காணப்படுவதாக இத்திணைக்களம் மேலும் தெரிவிக்கின்றது.

பலா, கொடி ஈரப்பலா, கமுகு, மஹோகனி, கட்டுகித்துல், ஆலம் போன்ற தாவரங்களை இங்கு பெருமளவு காணலாம். இவை தவிர பச்சை மூங்கில், மஞ்சள் மூங்கில் என்பனவற்றுடன் இலுக்கு, மானா, எரமினி உள்ளிட்ட ஏராளமான புதர்வகைகளும் காணப்படுகின்றன. அதி உயர் வளத்தைக் கொண்ட இச்சரணாலயம் உலர் வலயக் காடுகளின் இயல்புகளையும் அரைகுறை ஈரவலயக் காடுகளுக்குரிய தன்மையும் கொண்டு விளங்குவது ஒரு விசேட அம்சமாகும்.

கேகாலை நகர மத்தியில் அமைந்துள்ள இச்சரணாலயமானது, சிறந்த வளிமண்டலச் சூழலைக் கொண்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

-அ


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக பாடநெறி பாகம்-II
பாடம் 92

# வானொலி நாடகங்கள் ஒலிப்பதிவு செய்யப்படல்

வானொலி நாடகங்கள் ஒரு காலத்தில் நேயர்கள் மத்தியில் பலத்த அபிமானத்தைப் பெற்ற ஓர் அம்சமாக இருந்தது. தற்போது இருப்பதைப்போன்று தொலைக்காட்சி நாடகங்களின் வியாபிப்பு இல்லாதிருந்த காலங்கள் அவை. எனவே, மக்களுக்கு வானொலி நாடகங்களே அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்தன. மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள் ஆகியனவே மக்களின் ரசனைக்கு அப்போது தீனி போடுவனவாக இருந்தன.

குறிப்பாக, மேடை நாடகங்கள் அரங்கேறிய அதே சமயத்தில் வானொலி நாடகங்கள் நேயர்களின் ரசனையுள் ஒன்றிவிட்ட ஒன்றாகவே அமைந்திருந்தது.



## வானொலி நாடகங்கள் அமைக்கப்பட்ட விதம்

நவீன தொழில்நுட்ப கருவிகள் இல்லாதிருந்த காலங்கள் அவை. ஒலிவாங்கியும், ஒலிப்பதிவுக் கருவிகளும் இருந்தபோதிலும் இப்போதிருப்பதைப் போன்று ஒலிநயத்தை மாற்றியமைக்கக்கூடியவாறோ, ஒலிக்குறியீடுகளை நவீன ரீதியில் தொகுக்கவோ முடியாதிருந்த காலத்தில் எவ்வாறு வானொலி நாடகங்களை ஒலிப்பதிவு செய்ய முடிந்தது என்ற கேள்வி எழலாம். அதாவது, சாதாரணமாக ஒரு அறையினுள்ளேயே இந்த நாடகங்களின் ஒலிப்பதிவுகள் செய்யப்பட்டன. ஒலிவாங்கிகளின் எதிரே குறிப்பிட்ட கதாபாத்திரங்கள் வீற்றிருக்க தமக்குரிய வசனப் பிரதிகளை வைத்துக்கொண்டு கதாபாத்திரங்கள் தமது நடிப்பை வெளிப்படுத்துவர். நாடகத்தின் இயக்குனராக கருதப்படும் நெறியாள்கையாளர் நாடகத்தை நெறிப்படுத்த நடிகர்கள் தமக்குரிய





வசனங்களை வெளிப்படுத்தி நடிப்பர்.

இதிலுள்ள விசேட அம்சம் என்னவென்றால், அவை மேடை நாடகமாக இல்லாத நிலையிலும், பார்வையாளர்கள் எவரும் இல்லாத நிலையிலும் நடிகர்கள் தமது கதாபாத்திரத்தின் தன்மையை உள்வாங்கிக் கொண்டு, ஒலிவாங்கி ஊடே அதனை வெளிப்படுத்த வேண்டும். இங்கு ஒலிவாங்கிக்கும் (mic) நடிகர்களுக்கும் இடையே உள்ள தொடர்பே இன்றியமையாததாக அமைந்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் நடிகர்கள் தொலைவில் இருந்து பேசுவதைப் போன்று உணர்த்த வேண்டிய தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் சத்தத்தை கூட்டிக் குறைப்பதற்கு நவீன கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நடிகர்களேதான் ஒலிவாங்கியிலிருந்து சற்று தூரவிலகியிருந்து அதற்கான ஒலி அமைப்புக்களை கூட்டிக் குறைத்து வழங்கினர். ஒலிப்பதிவும்கூட 'ஸ்டீரியோ' ஒலிநயத்துடன் ஒலிப்பதிவு செய்யக்கூடியதாக இருக்கவில்லை. எனவே, அவை இயல்பான ஒலிநயத்தைக் கொண்டதாகவே இருந்தன. அவ்வாறே, குறித்த காலநேர இடைவெளிக்குள் நாடகத்தை 'எடிட்' செய்யவேண்டிய தேவையும் இருந்தது.

இவையும் கூட எவ்வித நவீன கருவிகளும் இல்லாத நிலையிலேயே கையாளப்பட்டன. நடிகர்கள்கூட தமது குரல்வளத்தைக் கொண்டே தத்தமது பாத்திரங்களுக்கு உயிரூட்டினர். வானொலி நேயர்கள்கூட, இந்நாடகங்களை செவிமடுக்கும் போது, நாடகத்தை ஒட்டிய காட்சி அமைப்புக்களை தமக்குள்ளே சிருஷ்டித் துக்கொண்டு ரசிக்கக்கூடிய ஒரு தன்மை இருந்தது. இதுவும்கூட ஒரு வகையில் வானொலி நேயர்களின் கற்பனை வளத்திற்கும் சிந்தனை திறனுக்கும் பயிற்சியை வழங்குவதாகவே இருந்தது. குரல் மாற்றிப்பேசுதல், ஏற்றம் இறக்கம், திடீர் சத்தங்களை எழுப்புதல் போன்றவை எல்லாம் தத்தமது தனித்திறமைகளினூடாகவே நடிகர்கள் வெளிப்படுத்தினர்.



ஆனால், இன்று அந்த வேலைகளை நவீன கருவிகள் செய்துவிடும் அளவிற்கு மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. (தொடரும்)

-ரிஷபன்

## மனித மூளை எப்படி நினைவுகளை சேமிக்கும்?



### 3D ஆய்வு

நமது மூளையானது நியூரான்களின் உதவியோடு நினைவுகளை சேமித்து வைக்கக்கூடிய ஓர் அபூர்வமான உறுப்பாகும். இதன்போது நாம் கற்றுக் கொண்ட விடயங்களையும் பார்த்து நினைவில் வைக்கும் விடயங்களையும் நினைவில் வைக்கும்போது அல்லது நினைவில் உள்ள விடயங்களை மீட்டிப் பார்க்கும்போது நாம் உடல்ரீதியாக ஒருவித ரசாயன மாற்றங்களுக்கு உள்ளாவோம்.



அதன்படி நினைவுகள் மூளைக்குள் சென்று பதிவாகும் போது, மூளைக்குள் ஒருவித ரசாயனம் ஒளிர, தொடங்கும். இவ்வாறு ஒளிர்வதைத்தான் எம்.ஆர்.என்.ஏ. டிஸ்ப்ளே என்னும் தொழில்நுட்பம்மூலம் அமெரிக்கா விஞ்ஞானி இந்த 3D ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

## ஓவியம் வரைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளி நிலையம் சென்ற பிரித்தானியாவின் முதல் விண்வெளி வீரர்

பிரித்தானிய விமானப் படை அதிகாரியும் விமான ஓட்டியுமான மேஜர் டிம் பீக் குறித்து அண்மைக்காலமாக பிரித்தானியாவில் மிகவும் பெருமையுடன் பேசப்பட்டு வருகின்றது. டிம் பீக் தற்போதளவில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருப்பதே அதற்குரிய காரணமாகும். அத்துடன், பிரித்தானியாவை பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச விண்வெளி நிலையம் சென்ற முதலாவது விண்வெளி வீரரும் இவரே ஆவார்.


டிம் பீக்

ஐரோப்பிய விண்வெளி நிறுவனமே (ESA-European Space Agency) டிம் பீக்கை குறித்த விண்வெளிப் பயணத்திற்குரிய விண்வெளி வீரராக தெரிவுசெய்தது. இரு பிள்ளைகளின் தந்தையான டிம் பீக்குடன், ரஷ்ய விண்வெளி வீரரான கொமாண்டர் யூரி மெலாச்சென்கோ மற்றும் அமெரிக்க நாசா நிறுவனத்தின் பொறியியலாளரான டிம் கொப்ரா ஆகியோர் இந்த விண்வெளிப் பயணத்தில் கலந்துகொண்டனர்.

## விண்வெளிப் பயணம்

டிம் பீக்கின் முதலாவது விண்வெளிப் பயணமாக இது அமைந்திருந்ததால், அவர் மிகவும் ஈடுபாட்டுடன் இந்தப் பயணத்தில் இணைந்துகொண்டிருந்தார். சர்வதேச விண்வெளி நிலையத்தின் வெளிப்பகுதியில் சில திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டே டிம் பீக்கும் நாசா பொறியியலாளரான டிம் கொப்ராவும் அங்கு அனுப்பப்பட்டிருந்தனர்.



விண்வெளி உடையுடன் டிம் பீக்

## மின் அலகினை புதுப்பித்தல்

விண்வெளி நிலையத்தின் வெளிப்புறமாக பொருத்தப்பட்டிருந்த மின் அலகு ஒன்றில் ஏற்பட்டிருந்த கோளாறினை சரி செய்து அதனை புதுப்பிப்பதே பீக் மற்றும் கொப்ராவின் முதலாவது நடவடிக்கையாக இருந்தது. இவர்கள் இருவரும் குறித்த பகுதிக்குச் சென்று அந்த நடவடிக்கையைள வெற்றிகரமாக முடித்தனர். எனினும், இதன்போது பீக்கும் கொப்ராவும் ஓர் எதிர்பாராத விபத்தொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது.


## எதிர்பாராத விபத்து

மின் அலகை வெற்றிகரமாக புதுப்பித்த பின்னர், குறிப்பிட்ட சில குறைபாடுகளை திருத்தும் பணியில் இவர்கள் இருவரும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, தனது தலைக்கவசத்தினுள் நீர் கசிவதை கொப்ரா உணர்ந்தார். மிக மெதுவாகவே நீர் கசிந்துகொண்டிருந்தாலும், அந்த நீரினால் படிப்படியாக தலைக்கவசமும் விண்வெளி உடையும் நிறைந்துவிட்டால், கொப்ராவினால் சுவாசிக்க முடியாத நிலை ஏற்படும் என்பதை அவர்கள் இருவரும் உணர்ந்துகொண்டனர். இது பதற்றத்திற்குரிய விடயமாக இருந்தாலும்கூட, இருவரும் பொறுமையோடு தாம் எதிர்கொண்டுள்ள இக்கட்டான நிலை குறித்து விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்த சக விண்வெளி வீரர்களுக்கும் புவியில் நாசா நிறுவனத்திற்கும் முதலில் அறிவித்தனர். பின்னர், விண்வெளி நிலையம் திரும்பிய அவர்கள், விண்வெளி உடையை கழற்றிய பின்பே நிம்மதிப் பெருமூச்சு விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


மின் அலகை மாற்றும்போது..

## டிம் பீக்

பிரித்தானியாவின் மேற்கு சசெக்ஸில் அமைந்துள்ள ச்சிசெஸ்டர் மாகாணத்தில் 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி டிம் பீக் பிறந்தார். இவர், பிரித்தானிய வான்படை அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையமே சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் செல்வதற்கு டிம் பீக்கை தெரிவுசெய்தது. தொடர்ச்சியாக 6 வருடங்கள் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்பே, இப்பயணத்திற்காக அவர் தெரிவுசெய்யப்பட்டார்.


மின் அலகை மாற்றிய பின்னர் பீக்கும் கொப்ராவும் விண்வெளி நிலையத்தினுள் மீண்டும் பிரவேசிக்கும்போது.....

டிம் பீக், கடந்த 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதியே சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்றார். அவர் அங்கு சுமார் 6 மாத காலம் தங்கியிருப்பார் என்பது குறிப்பிடத் தக்கது.

(-அ)


நடந்த விபத்து குறித்து ஆராய்கையில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகம் தேவையில்லை.... ஆனால், இல்லாவிடின் ஆபத்து!



அயடின் என்பது, உடலுக்கு சிறியளவில் தேவைப்படும் ஒரு போஷாக்கு பதார்த்தமாகும். உடலில் இருக்க வேண்டிய அயடின் அளவு 15 முதல் 20 மில்லி கிராமாகும். இதில் அதிகமான அளவு தைரொயிட் சுரப்பியிலேயே உள்ளது. ட்ரைஅயடொதைரொனின் மற்றும் தைரொக்சின் ஆகிய தைரொயிட் ஹோமோன்களின் உற்பத்திக்கு அயடின் அத்தியாவசியமாக உள்ளது. கடலில் (கடல் நீரில்) அயடின் அடங்கியுள்ளது. மண்ணிலும் அடங்கிள்ளது.

## தைரொயிட் ஹோமோன்களின் செயற்பாடுகள்

நமது உடலில் உள்ள அனைத்து கலங்களிலும் தைரொயிட் ஹோமோன்கள் செயலாற்றுகின்றன. உடல் வளர்ச்சிக்கு, உள வளர்ச்சிக்கு, உடலின் நோய் எதிர்ப்புச்சக்திக்கு, உடலின் வெப்பநிலையினை பாதுகாப்பதற்கு என பல்வேறு செயற்பாடுகளுக்கு தைரொயிட் ஹோமோன் அவசியமாகும். கருவில் இருக்கும்போதும், பிள்ளைப் பருவத்திலும், இளம் பருவத்திலும் மூளை மற்றும் நரம்புத் தொகுதியின் வளர்ச்சிக்கும் அயடின் அவசியமாகும். உடலில் அயடின் உற்பத்தி நிகழாமை காரணமாக, நாம் உட்கொள்ளும் உணவுகளிலிருந்தே அயடினைப் பெற வேண்டியுள்ளது. உயரமாக வளர்தல். உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி போன்ற பிள்ளைகளின் வளர்ச்சிக் காலங்களில் உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கு தைரொயிட் ஹோமோன் அவசியமாகும்.

## நாளாந்த அயடின் தேவை

**வயது மட்டம்**

- 0- 59 மாதங்கள் - நாளாந்தம் 90 மைக்ரோகிராம்
- 6வயது - 12வயது - நாளாந்தம் 120 மைக்ரோகிராம்
- 12வயதிற்கு மேல் - நாளாந்தம் 150 மைக்ரோகிராம்
- கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார் - நாளாந்தம் 250 மைக்ரோகிராம்










## அயடின் அடங்கிய உணவுகள் சில...

- பால் உணவுகள் (சீஸ், யோகட்)
- கடல் உணவுகள் - கடலிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள்
- உலர்ந்த கடற் தாவரங்கள்
- வான்கோழி
- முட்டை
- கிழங்கு
- அயடின் அடங்கிய மண்ணில் வளரும் தாவரங்கள்
- தானியங்கள் (சீரியல் வகைகள்)
- ஸ்ட்ரோபெரி
- சூரை மீன்

ஒருவருக்கு நாளாந்தம் 150 மைக்ரோகிராம் மட்டுமே அயடின் தேவைப்படுகின்றது. மனிதனின் ஆயுட்காலத்தினை பொதுவாக 70 ஆண்டுகள் என்று எடுத்துக்கொண்டால், முழு ஆயுளுக்கும் 5 கிராம் அயடின்தான் தேவைப்படுகின்றது. அதாவது, அது ஒரு தேக்கரண்டி அளவாகும்.

மண்ணில் உள்ள அயடின் அளவு குறைந்தால், நாம் உட்கொள்ளும் உணவிலுள்ள அயடின் அளவும் குறைவடையும். கடல் உப்பில் அயடின் அதிகளவில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் அயடின் குறைபாட்டினால் ஏற்படும் பல்வேறு நோய்கள் IDD (Iodine Deficiency Disorder) என்று சுருக்கமாக அழைப்படுவதுண்டு. இந்த நோயை உலகிலிருந்து முற்றாக இல்லாதொழிக்கும் நோக்கில் 1994 இல் யுனிசெஃப் அமைப்பும் உலக சுகாதார நிறுவனமும் உலகளாவிய ரீதியில் சாதாரண உப்பினை அயடின் கலந்த உப்பாக மாற்றும் நிகழ்ச்சித் திட்டத்தை (Universal salt Iodization) அமுல்படுத்தும் வகையில் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்தன.

## அயடின் குறைந்தால்...


சோம்பல் தன்மை ஏற்படும். மூளை வளர்ச்சி மந்தமடையும். தொண்டைக் கழலை போன்ற நோய்கள் ஏற்படும். பிள்ளைகளுக்கும் இளம் வயதினருக்கும் போதியளவு அயடின் கிடைக்காவிடின் உடல் மந்த வளர்ச்சி, புத்திமட்டம் குறைவு போன்ற பாதிப்புகள் ஏற்படக்கூடும்.


வயது வந்தவர்களுக்கு தொண்டைக்கழலை மற்றும் அதனுடன் தொடர்புடைய கோளாறுகள், ஹைபொதைரொயிடிசம், மந்தமான உள செயற்பாடு ஆகிய குறைபாடுகள் ஏற்படும்.



## உடலுக்கு பெறப்படும் விதம்

உணவின் மூலமே உடலுக்கு அயடின் பெறப்படுகின்றது. நாம் உண்ணும் உணவில் உள்ள அயடினை குடலும் கல்லீரலும் உறிஞ்சிக் கொள்கின்றன. இதில் 5 சதவீதத்தினை மட்டுமே உடல் பயன்படுத்துகின்றது. எஞ்சிய 95 சதவீதமும் சிறுநீரின் மூலம் வெளியேற்றப் படுகின்றது.



## உங்களுக்குத் தெரியுமா?


இன்று சந்தையில் அயடின் கலக்கப்படாத உப்பு விலை குறைவாக விற்பனை செய்யப்படுகின்றது. 5 முதல் 10 ரூபா இலாபத்திற்காக அயடின் கலக்காத உப்பு கொள்வனவு செய்யப்படுகின்றது. இது பற்றி நீங்கள் மற்றவர்களையும் அறிவுறுத்துங்கள். கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது அயடின் குறைபாட்டினால் ஏற்படும் கோளாறுகள் குறைவாகும். இதற்கு காரணம், உப்பில் அயடின் சேர்க்கப்படுகின்றமையாகும். அனைவரும் அயடின் கலந்த உப்பினை உட்கொள்வது அவசியமாகும். இதனால், உப்பினை கொள்வனவு செய்யும் போது அதில் அயடின் அடங்கியுள்ளதா? என்பதனை பரிசோதித்துக்கொள்ளுங்கள்.

(-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளாததால் அழிவைச் சந்தித்த ராட்சதக் குரங்கினம்



காலமாற்றத்திற்கேற்ப தமது உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளாத காரணத்தினால் இவ்வுலகில் இருந்து முற்றாக அழிந்த ராட்சதக் குரங்கினம் குறித்து ஜேர்மனிய விஞ்ஞானிகள் குழுவொன்று அண்மையில் பல தகவல்களை வெளியிட்டிருந்தது.

## விஞ்ஞானிகளின் பங்களிப்பும் தரவுகள் ஆய்வுக்குட்படுத்துதலும்

மானிட பரிணாம வளர்ச்சி மற்றும் பூமியில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளும் ஜேர்மனியின் சென். கென்பர்க் விஞ்ஞானப் பிரிவின் ஆய்வாளர்களும் விஞ்ஞானிகளுமே இந்தக் குரங்கினம் தொடர்பான ஆய்வு அறிக்கையொன்றை தயார்படுத்தியிருந்தனர். அகழ்வாராய்ச்சி ஒன்றின்போது, கண்டுபிடிக்கப்பட்ட ஜகன்டோபித்திகஸ் ராட்சதக் குரங்கின் பற்களை ஆய்வுக்குட்படுத்தியே அவர்கள் இந்த அறிக்கைய தயார்ப்படுத்தியிருந்தனர். அதன்போது, அவற்றின் உணவுப் பழக்கம் குறித்து தெளிவான விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ள முடிந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலேயே ஜகன்டோபித்திகஸ் குரங்கின் பற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த பற்களையே ஜேர்மன் விஞ்ஞானிகள் தமது ஆய்வுகளுக்கு பயன்படுத்தியிருந்தனர்.

## முதன் முதலில் கிடைத்த பற்கள்

1935 ஆம் ஆண்டு புதைபடிம மானிட விஞ்ஞானியான குஸ்டாச் ஹெயின்ரிச் ரெல்ஃப் என்பவருக்கே ராட்சதக் குரங்கொன்றின் பற்கள் முதன்முதலில் கிடைத்துள்ளன. அந்தப் பற்களை அகழ்வாராய்ச்சியின்போது அவர் கண்டுபிடிக்கவில்லை. மாறாக, பல் வைத்தியர் ஒருவரினால் இப்பற்கள் பாதுகாக்கப்பட்டு வந்த நிலையிலேயே, குஸ்டாச்சிற்கு அவை கிடைக்கப்பெற்றுள்ளன. சாதாரண பற்களின் அளவினைவிட மிகப் பெரியதாக இருந்த அந்த பற்கள், ஒரு ராட்சத மனிதனுடையதாக இருக்கலாம் என எண்ணியே குறித்த சீன பல் வைத்தியர் சீனாவின் பின்தங்கிய கிராமமொன்றில் வாழ்ந்த கிராமவாசியிடம் இருந்து அவற்றை விலைகொடுத்து வாங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இந்த ராட்சதக் குரங்கினத்தைச் சேர்ந்த குரங்குகள் சுமார் 10 அடி (3 மீற்றர்) உயரம் கொண்டவையாக இருந்துள்ளன. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பற்கள் இரண்டை ஆய்வுகளுக்கு உட்படுத்தியதை அடுத்தே, இந்த குரங்கினம் பற்றிய தகவல்கள் வெளிப்பட்டுள்ளன. இந்த ராட்சதக் குரங்கினம் சுமார் 100,000 வருடங்களுக்கு முன்னர் பூமியில் இருந்து அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இவ்வினத்திற்குரிய ஒவ்வொரு குரங்கும் சுமார் 500 கிலோ கிராம் எடையைச் கொண்டிருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

## அழிவுக்கான காரணம்

பூமியில் வாழ்ந்த மிகப் பெரிய குரங்கினமாக கருதப்படுகின்ற இதற்கு 'ஜகன்டோபித்திகஸ்' (Gigantopithecus) என பெயரிட்டுள்ளனர். இந்த குரங்கினம் ஒரு தாவர உண்ணியாகும். பூமியில் ஏற்பட்ட வேறுபாடுகளினால் சில காடுகள் சவன்னா புல்வெளிகளாக மாற்றமடைந்துள்ளன. அச்சந்தர்ப்பத்தில் தமது உணவுப் பழக்கத்தை மாற்றாத காரணத்தினால் இந்த ராட்சதக் குரங்கினம் படிப்படியாக அழிவினைச் சந்தித்துள்ளதாக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்திற்கு உகந்த வாகனம்





எதிர்காலத்தில் குறுந்தூரப் பயணம் செய்வதற்கும் ஓர் இடத்தினை விரைவாக சென்றடைவதற்கும் மிகவும் உகந்த வாகனம் ஒன்றினை ஜேர்மனியின் மியூனிக் நகரில் அமைந்துள்ள 'Aemotics' என்ற நிறுவனம் தயாரித்து அறிமுகம் செய்துள்ளது. இந்த வாகனத்திற்கு 'AeYO' என்று அந்நிறுவனம் பெயர் சூட்டியுள்ளது. இதன் விலை 370 பவுண்கள் ஆகும்.

## AeYO

சைக்கிளில் இருப்பது போன்றே கைப்பிடி, ப்ரேக் லீவர்ஸ் மற்றும் கூடை ஆகிய பாகங்கள் இந்த வாகனத்தில் காணப்பட்டாலும், இதனை இயக்கும் பிரதான சுக்கான் பகுதியுடன் ஒரு சோடி ஸ்கேட்ஸ் இணைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஸ்கூட்டர் ஒன்றை செலுத்துபவர் தனது ஒரு காலை மட்டுமே பயன்படுத்துவார். ஆனால், இந்த AeYO வாகனத்தினை செலுத்துவதற்கு இரண்டு கால்களையும் பயன்படுத்த வேண்டும். ஏனெனில், இதனை இயக்கும்போது இரண்டு பாதங்களுக்கும் ஸ்கேட்ஸ் பொருத்தப்படுகின்றன. அப்போதுதான் அதனை செலுத்துபவரால் சுதந்திரமாக செலுத்த முடியும் என்பதோடு, நிலத்தில் சறுக்கி விழுவதற்கான வாய்ப்பும் ஏற்படாது. அத்துடன், அவரால் கால்களை நன்கு நிலத்தில் ஊன்றிக் கொள்ளவும் முடியும்.





## உடலுக்கு ஆரோக்கியமானது

இந்த வாகனத்தினை செலுத்தும்போது முள்ளந்தண்டுப் பகுதி, உடல் பின்பாகம், கைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய 10 தசைப் பகுதிகள் நன்கு இயங்குகின்றன. மேலும், AeYO வாகனத்தினை ஒருவர் செலுத்தும்போது, அவர் நின்றுகொண்டே செல்ல வேண்டி இருப்பதனால் முழு உடலும் நன்கு செயற்படக்கூடியதாக இருக்கும் என்று Aemotics நிறுவனத்தின் பேச்சாளரான என்ட்ரியஸ் எப்டெய்ன் தெரிவித்துள்ளார்.



## பல்வேறு வசதிகள்

இதனை பயன்படுத்துபவரின் தேவைகளுக்கு ஏற்ப AeYO வாகனத்தில் மின் விளக்குகள், கூடை போன்றவற்றினைப் பொருத்திக்கொள்ள முடியும். AeYO வாகனத்தை பயன்படுத்தாத நேரங்களில் அதனை மடித்து வைக்கவும் முடியும். அதன்போது அதிலுள்ள காந்தப் பகுதிகள் ஒன்றுடன் ஒன்று கவர்ந்து பொருந்திக்கொள்கின்றன.

குறுந்தூரப் பயணங்களுக்கு இந்த வாகனம் மிகவும் பயன்படக்கூடியதாக இருக்கும். எரிபொருள் பாவனையும் இல்லை என்பதால் சூழல் மாசடைவோ, பணச் செலவோ இதனால் ஏற்படுவதில்லை.

(-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் சரத்-கமல் ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

**සරත්: කමල්, අපි ලබන මාසේ ඉඳලා ගාල්ලට යනවා.**
கமல், அப்பி லபன மாசே இந்தலா கால்லட்ட யனவா.
சரத்: **கமல், நாங்கள் எதிர்வரும் மாதத்தில் இருந்து காலிக்குப் போகிறோம்.**

**කමල්: ඒ ඇයි සරත්?**
ஏ எய் சரத்?
கமல்: **அது ஏன் சரத்?**

**සරත්: අපේ තාත්තාට ගාල්ලෙ ලංකා බැංකුවට මාරුවීමක් ඇවිල්ලා.**
அப்பே தாத்தாட்ட கால்லெ லங்கா பெங்குவட்ட மாருவீமக் எவில்லா.
சரத் **எங்கள் அப்பாவுக்கு காலியிலுள்ள இலங்கை வங்கிக்கு இடமாற்றம் கிடைத்துள்ளது.**

**කමල්: එතකොට ඔයාලගේ මේ ගේ?**
எதகொட்ட ஒயாலகே மே கே?
கமல்: **அப்படியென்றால் உங்களுடைய இந்த வீடு?**

**සරත්: අපි මේ ගෙදර කුලියට ඉන්නේ.**
அப்பி மே கெதற குலியட்ட இன்னே.
சரத்: **நாம் இந்த வீட்டில் வாடகைக்கே இருக்கிறோம்.**

**කමල්: එතකොට පාසල?**
எதகொட்ட பாசல?
கமல்: **அப்படியென்றால் பாடசாலை?**

**සරත්: තාත්තා කිව්වා එහෙ පාසලකට දානවා කියලා.**
தாத்தா கிவ்வா எஹெ பாசலகட்ட தானவா கியலா.
சரத்: **அங்குள்ள ஒரு பாடசாலையில் சேர்ப்பதாக அப்பா சொன்னார்.**

**කමල්: ඔයා දැන් මේ ගැන අනිත් යාලුවන්ට කිව්වද?**
ஒயா தென் மே கென அனித் யாலுவன்ட்ட கிவ்வத?
கமல்: **நீ இதைப் பற்றி ஏனைய நண்பர்களிடம் கூறினீரா?**

**සරත්: නැහැ. අද කියන්න ඕනේ.**
நெஹெ. அத கியன்ன ஓனே.
சரத்: **இல்லை. இன்று சொல்ல வேண்டும்.**

**කමල්: කොහේ ගියත් කමක් නැහැ සරත්. අපේ යාලුකම තියා ගමු.**
கொஹே கியத் கமக் நெஹெ சரத். அப்பே யாலுகம தியா கமு.
கமல்: **எங்கு போனாலும் பரவாயில்லை சரத். எமது நட்பைத் தொடர்வோம்.**

**සරත්: ඔව් කමල්. මට නම් ඔයාලව කවදාවත් අමතක වෙන්නේ නැහැ.**
ஒவ் கமல். மட்ட நம் ஒயாலவ கவதாவத் அமதக வென்னே நெஹெ.
சரத்: **ஆம் கமல். எனக்கென்றால் உங்களை ஒருபோதும் மறக்க முடியாது.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ........................... කුලියට ඉන්නේ.
2. එතකොට ...........................
3. අමතක........................... නැහැ.




## கலப்பு வாக்கியம்
## Complex Sentence

**Whatever, Wherever, Whenever, Even if** முதலான இணைக்கும் சொற்களை (Joining Words) தனித்தனியாகக் கையாண்டு ஒன்றிணைக்கப்பட்டுள்ள கலப்பு வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

அ) Whatever the price may be, I will buy that book.
விலை என்னவாக இருந்தாலும், நான் அந்த நூலை வாங்குவேன்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- Whatever the price may be,
விலை என்னவாக இருந்தாலும்,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

- I will buy that book.
நான் அந்தப் புத்தகத்தை வாங்குவேன்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

ஆ) You can sit wherever you like.
நீ விரும்புகின்ற எவ்விடத்திலாவது, உட்காரலாம்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- Wherever you like,
நீ விரும்புகின்ற எவ்விடத்திலாவது,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

- You can sit.
உன்னால் உட்கார முடியும்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

இ) Whenever you need help, I will help you.
உனக்கு உதவி தேவையான பொழுதெல்லாம், நான் உனக்கு உதவுவேன்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- Whenever you need help,
உனக்கு உதவி தேவையான பொழுதெல்லாம்,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

- I will help you.
நான் உனக்கு உதவுவேன்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

ஈ) Even if you pay me, I won't do that work.
நீ எனக்குப் பணம் செலுத்தினாலும்கூட, நான் அந்த வேலையை செய்யமாட்டேன்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)


- Even if you pay me,
நீ எனக்குப் பணம் செலுத்தினாலும்கூட,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

- I won't do that work.
நான் அந்த வேலையை செய்யமாட்டேன்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T20 தரப்பட்டியல் முதலிடத்திற்கு மோதல்




T20 தரப்படுத்தல் பட்டியலில் முதலாம் இடத்திற்கு இலங்கை, இந்திய அணிகள் மாறி மாறி போட்டி போட்டுக்கொண்டுள்ளன. இலங்கை-இந்திய அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் T20 போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவுடனான மூன்று T20 போட்டிகளையும் வெற்றியீட்டிய இந்திய அணி தரப்பட்டியலில் முதலாவது இடத்தில் இருந்தது. இதேவேளை, நியூஸிலாந்திடம் தோல்வியை எதிர்கொண்ட இலங்கை அணி மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது. இத்தகைய பின்னணியிலேயே இலங்கை அணி இந்தியாவிற்கு விஜயம் செய்து அவ்வணியுடன் மூன்று போட்டிகளைக் கொண்ட T20 போட்டியில் கலந்துகொண்டது. இதில் கடந்த 09 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி வெற்றியீட்டியதையடுத்து இலங்கை அணி தரப் பட்டியலில் முதலாவது இடத்தைக் கைப்பற்றிய அதேவேளை, இந்திய அணி மூன்றாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது.

எனினும், ஏனைய இரண்டு T20 போட்டியின் முடிவுகள் இந்த பட்டியலில் மாற்றங்களை கொண்டு வருமா என்ற நிலையே இருந்தது. ஏதோ ஒரு வகையில் இலங்கை இந்திய அணிகள் ஒன்றையொன்று மாறி மாறி முந்திக்கொண்டு முதல் இடத்தை அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




எதிர்வரும் மார்ச் மாதம் இந்தியவில் நடைபெறவுள்ள மகளிர் T20 உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணியின் தலைமைப் பொறுப்பு சஷிகலா சிறிவர்தனவிற்கு வழங்கப் பட்டுள்ளது.




# மீண்டும் T20 இல் நரைன் வருகிறார்



கின்றது. கடந்த வருடம் நொவெம்பர் மாதம் இலங்கையுடனான ஒருநாள் போட்டியுடன் சர்வதேச போட்டிகளிலிருந்து விலகியிருக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

தற்போதைய நிலவரத்தின்படி T20 பந்துவீச்சு தரப்படுத்தல் பட்டியலில் நரைன்தான் முதலிடத்தில் உள்ளார். T20 போட்டிகளில் மே.இ.தீவுகள் சார்பாக அதிக விக்கெட்களைப் பெற்றிருப்பவரும் நரைன்னே ஆவார். இத்தகைய நிலையில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள T20 உலகக் கிண்ணத்தில் மே.இ.தீவுகள் அணியினரின் பெயர் பட்டியலில் நரைனின் பெயர் இடம்பெற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

விதிமுறைகளுக்கு மாறாக பந்துவீசவதாகக் கூறப்பட்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து விலக்கப்பட்டிருந்த மே.இ.தீவுகள் அணியின் ...ில் நரைன் மார்ச் மாதத்தி... இந்தியாவில் நடைபெறும் T20 உலகக் கிண்ணப் போட்டியில் கலந்துகொள்வார் என்று கருதப்படு

ஐ சி சி டெஸ்ட் தரப்படுத்தலில் இந்திய அணி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளதாக இணைய செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது டெஸ்ட் தரப்பட்டிய்லில் முதலாவது இடத்தில் இருந்த தெ.ஆபிரிக்க அணி இங்கிலாந்து அணியிடம் தோல்வியடைந்ததையடுத்து தெ.ஆபிரிக்க அணி சடுதியாக 3 ஆம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டு இந்திய அணி முதலாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டது.



# ஆட்டத்தைத் தொடர்கிறார் பிரன்டன் மெக்கலம்




இலங்கை - நியூஸிலாந்து போட்டித் தொடரின்போது, காயம் காரணமாக போட்டிகளிலிருந்து விலகிய நியூஸிலாந்து துடுப்பாட்ட வீரர் பிரென்டன் மெக்கலம் மீண்டும் அணியில் இணைந்துள்ளார். அவுஸ்திரேலியாவுடன் நடைபெறும் போட்டித் தொடரிலேயே மெக்கலம் மீண்டும் இடம்பெற்றுள்ளார். அணியின் தலைமைப் பொறுப்பும் மெக்கலத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அடுத்து வரும் T20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கும் அவரே நியூஸிலாந்து அணியின் தலைவராக செயற்படுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை-நியூஸிலாந்து அணிகளுக்கிடையே ஒருநாள் போட்டியொன்றின்போதே மெக்கலம் உபாதைக்கு ஆளாகியிருந்தார். ஸ்டீவன் ஃபிளேமிங்கிற்கு பின்னர் நியூஸிலாந்து அணிக்கு கிடைக்கப்பெற்ற உன்னதமான ஒரு தலைவராக கருதப்படுகின்ற மெக்கலம் பல உலக சாதனைகளுக்கும் உரித்துடையவ்ராவார்.

T20 உலகக் கிண்ணப் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியின் தலைவராக ஸ்டீவன் ஸ்மித்தை ஆஸி கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நியமித்துள்ளது. கால் உபாதையினால் அவதிப்படுகின்ற T20 அணித் தலைவர் ஆரோன் ஃபின்ச்சின் இழப்பை ஈடுசெய்யும் பொருட்டே தலைமைப் பொறுப்பு ஸ்மித்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஆஸி. பகிரங்க டென்னிஸில்

# ஜெக்கோவிச், என்ஜலிக் செம்பியன்



'அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ்' போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆடவர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை சேர்பியாவின் நொவெக் ஜெக்கோவிச் மற்றும் மகளிருக்கான வெற்றிக் கிண்ணத்தை ஜேர்மனியின் என்ஜலிக் காபர் ஆகியோரும் வெற்றி கொண்டனர்.

இறுதிப் போட்டியில் ஆடவர் பிரிவில் பிரிட்டனின் என்டி மரேயை 3-0 என்ற கணக்கில் ஜெக்கோவிச் தோற்கடித்ததுடன், மகளிர் பிரிவில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸை தோற்கடித்ததன் மூலம் என்ஜலிக் காபர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# முகாமில் சமைப்போம்!

எதிர்வரும் சில தினங்களில் ஒன்பதாவது தேசிய சாரணர் ஜம்போரி இடம்பெறவுள்ளது. அங்கு சாரணர்களுக்கு சமையலறை செயற்பாடுகளை எளிதாக்கிக்கொள்வதற்கு கீழே குறிப்பிடப்படுகின்ற அடுப்பு வடிவமைப்புக் குறிப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## முப்பரிமாண உதவி அடுப்பு Three Pont Fire



இந்த அடுப்பினை சம உயரம் கொண்ட கற்களை முக்கோண வடிவில் வைத்து அதன்மீது பாத்திரத்தினை வைக்க வேண்டும். கற்களுக்கு இடையிலான



இடைவெளியில் விறகுகளை செலுத்தி இந்த அடுப் பினை மூட்டிக் கொள்ள முடியும்.

**கவனிக்க:** பாத்திரத்தின் அளவினைக் கருத்திற்கொண்டு கற்கள் மூன்றினையும் சரியாக வைக்க வேண்டும்.

## முப்பாத அடுப்பு Tripod Fire



சாரணர் ஈட்டிகள் மூன்றினை நிலத்தில் குத்தி பிரமிட் வடிவில் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். நடுவில் பாத்திரத்தினை தொங்க விட வேண்டும். பாத்திரத்தின் கீழ் தீச் சுவாலையின்மூலம் அடுப்பில் உணவுகளை சமைக்க வேண்டும்.

## ஊடுருவும் அடுப்பு Reflector Fire



குறுக்கு வடிவ தீச்சுவாலையினை சூழ கருங்கல் அல்லது கூர்மை கொண்ட குற்றிகளை வைத்து இந்த அடுப்பு நிர்மாணிக்கப்படுகின்றது. இதன்மூலம் கூடாரத்தினை நோக்கி வெளிச்சத்தினைப் பெறவும் ஈரலிப்பான விறகுக் குற்றிகளை உலரச் செய்யவும் இந்த அடுப்பின் மூலம் முடியும்.



## தூள் அடுப்பு



உபயோகப்படுத்தப்படாத டின் பாத்திரத்தின் அடிப்பாகத்தில் துளையிட்டு தூள் அடுப்பு உருவாக்கப் படுகின்றது. மரத்துண்டுகள், மரத்தூள் இட்டு மூட்டப்படும் இந்த அடுப்பில் உணவு சமைக்கும்போது, பெரிய மரக்குற்றிகளைத் தவிர்த்து சிறிய விறகுத் துண்டுகளைப் பயன்படுத்த முடியும்.

## விறகுக் கட்டு அடுப்பு Bale of wood fire



காற்று வீச்சு அதிகம் உள்ள காலநிலையில் இந்த அடுப்பு மிகவும் பயன்மிக்கது. ஒரே அளவிலான மரக்குற்றிகளை ஒன்றாக வைத்து அடுக்கிக் கட்ட வேண்டும். பின்பு குறுக்காக விறகுக் கட்டினை வைத்து அதன் மேற்பகுதியில் பாத்திரத்தினை வைத்து தீமூட்ட முடியும்.



## A வடிவ தீச்சுவாலை

தடிப்பான விறகுத் துண்டுகளை ஆங்கில A வடிவத்தில் வைத்து அதன் மீது விறகுத் துண்டுகளை வைத்து தீச்சுவாலையினை உருவாக்கிக்கொள்ள முடியும். விலங்குகளிடமிருந்து பாதுகாப்புப் பெறவும் முகாம் பகுதியின் இருளைப் போக்கவும் இந்த தீச்சுவாலை மிகவும் பொருத்தமானது.






# பலம் வாய்ந்த மரத் தூண்கள் இரண்டினை முகாமுக்கு எடுத்துச் செல்லுங்கள்

நீங்கள் முகாமுக்குச் செல்லும்போது, மரத்துண்டுகள் இரண்டினை எடுத்துச் செல்லுங்கள். அதனைக்கொண்டு துரிதமாக தூக்குத்தூக்கி அடுப்பினை உங்களால் அமைக்க முடியும். இதற்காக மரத்தூண்களை தாங்கிக்கொள்ளக்கூடிய பலமான மரத்தடியினால் தயாரித்துக்கொள்ளவேண்டும். இதற்கென கொய்யா, கோப்பி, அட்டேரியா குச்சிகள் மிகவும் பொருத்தமாக இருக்கும்.





## மரத்தூண்கள் இரண்டு வகைப்படும்

சாரணர் முகாமில் பயன்படுத்தப்படும் மரத்தூண் வகைகள் இரண்டு உள்ளன. அவை மேல்நோக்கிய தூண், கீழ்நோக்கிய தூண் என்று இரண்டு வகைப்படும்.

## கீழ்நோக்கிய மரத்தூண்




இது ஆங்கில 'J' வடிவம் கொண்டது இதில் 'J' வடிவ கொக்கியில் பாத்திரங்கள் தொங்க விடப்படும்.

## மேல்நோக்கிய மரத்தூண்



'7' இலக்க வடிவ மரத்துண்டுகளை மரத் தூண் கொக்கியாகப் பயன்படுத்த முடியும். குறிப்பிட்ட அளவு தூரத்திற்கு தொங்கவிடவும், தேவையான போது துரிதகதியில் அப்புறப்படுத்தவும் இதனால் முடியும்.

## அணில் மற்றும் ஆந்தையை செதுக்குவோம்!



சாரணர்களை சிறந்த சிற்பக் கலைஞர்களாக மாற்றுவதற்காக இந்த புதிய அத்தியாயத்தினை ஆரம்பித்துள்ளோம். நான்கு அங்குலம் நீளமும் அகலமும் கொண்ட மரக்குற்றியினை தெரிவுசெய்து அதன்மேல் அணில் மற்றும் ஆந்தையின் தலைப்பகுதிகளை வரைந்து இங்கு காட்டப்பட்டுள்ளவாறு தேவையற்ற பகுதிகளை செதுக்குதலின்மூலம் அகற்றிக்கொள்ளுங்கள்.


**கவனிக்க:** இது கழுத்தில் அணியும் கழுத்துப்பட்டியின் வோகலுக்குப் பொருத்தமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பருவ வெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



A படத்தை அவதானித்து B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக





பொருத்தமான வடிவங்களை வெட்டி ஒட்டி, படத்தைப் பூர்த்தி செய்க







எத்தனை உள்ளன?




அறிவுக்கு விருந்து (03.02.2016) விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| sun | l | c | b | s | u | n |
| boat | h | a | o | m | l | y |
| heart | e | r | a | u | i | p |
| snail | a | r | t | i | a | p |
| puppy | r | o | l | j | n | u |
| carrot | t | t | i | t | s | p |







சேர்த்தெழுதுக




குறுக்கெழுத்துப் போட்டி இல.176



**மேலிருந்து கீழ்**

01. உலகின் பிரசித்திபெற்ற மலைத்தொடர்களில் ஒன்று.
02. கிளி.
04. தோல் இசைக்கருவியொன்று. (தலைகீழ்)
05. நட்சத்திரம்.
06. காற்றினால் இயக்கப்படுவது.
08. தும்புத் தயாரிப்புப் பொருட்களில் ஒன்று.
10. தடி. (குழம்பியுள்ளது)

**இடமிருந்து வலம்**

01. இடி-மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பது.
03. மதியைக் கெடுக்கும் பானம்.
06. ஆண் மாடு. (மாறியுள்ளது)
07. ராசிகளில் ஒன்று.
09. இதனை சாப்பிட்டால் வாயில் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. (மாறியுள்ளது)
10. நான்கு கால்களையுடைய இந்த விலங்கினம், இரு கால்களிலும் நிற்கும் ஆற்றல் கொண்டது.

குறுக்கெழுத்துப் போட்டி இல.175 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வை | க் | 2 கோ | ல் | | ட |
| போ | | லா | வ | 3 கா | 4 தி |
| க | | க | 5 அ | ல | ம் |
| ம் | 6 ஏ | ல | | டி | |
| | 7 மா | ம் | 8 த | | னை |
| 9 தூ | ளி | | லை | ல் | 10 மு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இசை நாட்டியப் பள்ளியின் 25 ஆவது வருட கலைவிழாவின்போது மாணவியர் நடனம் ஆடும் காட்சியை படங்களில் காணலாம்.

# ஒளிமூல தகவல் தொடர்பாடல்




ஒளியின் மூலம் அதிவேகத்தில் தகவல்களைப் பரிமாறும் மைக்ரோ ப்ரொஸசர் 'சிம்' ஒன்றை ஆய்வாளர்கள் வடிவமைத்துள்ளனர். இதன் நீளம் 6 மி.மீற்றர். அகலம் 3 மி.மீற்றர். தகவல் அலைவரிசை அடர்த்தி 300 ஜிகாபிட்ஸ் ஒரு நொடியில் மின்சாரத்தை விட 10-15 மடங்கு வரையான மின்னல் வேகம்.

இத்தகவல் தொழில்நுட்பம் பிந்திய அதி நவீன தகவல் தொழில் நுட்பமாகும். இத் தொழில்நுட்பம் தொடர்பான மேலதிக மேம்பாடுகளை கொலராடோ பல்கலைக்கழகத்தின் 'போட்டோனிக்ட்' எனும் ஒளி தொடர்பான ஆய்வுக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். இக் கண்டுபிடிப்பானது, ஸ்மார்ட் போனில் இருந்து சுப்பர் கம்பியூட்டரையும் சுப்பர் கம்பியூட்டரில் இருந்து பெரிய அளவிலான தகவல் சேமிப்பு மையத்தையும் இணைக்க உதவும்.

# வருமுன் காப்போம்



வாழ்க்கையில் முன்னோக்கிய சிந்தனைகள் அவசியமாகவே இருக்கின்றன. வாழ்வில் ஓர் அங்கமான கற்றலிலும் முன்னோக்கிய சிந்தனைகள் அவசியமாகின்றன. இத்தகைய சிந்தனைகளே, வாழ்வில் ஏற்படும் துன்பங்கள், கஷ்டங்கள், வேதனைகள், ஆபத்துக்கள்,தோல்விகளில் இருந்து காத்து எம்மை சரியான வழியில் அழைத்துச் செல்கின்றன. உரிய வகையில் நிரைப்படுத்தப்பட்ட முன்நோக்கிய சிந்தனையானது, மிகச் சிறப்பான எதிர்கால வாழ்க்கைக்கும் அடித்தளம் இடுகின்றது.







பாத்திமா ருகையா முபஷ்ஷிர்,
மாறை/அறபா மு.பாட.,
வெலிகாமம்.



டயூரிகா,
இறம்பைக்குளம் ம.வித்., வவுனியா.



எஸ்.நவனீதகுமார்,
ஹைய்பொரஸ்ட் த.வித்.,
கந்தப்பளை.



மு.அர்ஜின் சாம்ளீ,
தி/ஸ்ரீகோணேஸ்வரா இந்.கல்.,
திருகோணமலை.




பு.கிருஷாலி,
யா/சாவகச்சேரி இந்துக் கல்.,
சாவகச்சேரி.



வை.திலீபன்,
பரிசுத்த திருத்துவ ஆ.கல்.,
நுவரெலியா.



எஃப்.அஸ்மா,
ரஹ்மானிய்யா ம.வித்.,
வெலிபென்ன.



வி. கிரிகாந்,
க/இக்ரா மு.ம.வித்.,
உலப்பனை.



நா.கோபிதன்,
பிறமண்டு வி[illegible] வவுனியா.



பஹிமா சஃபா,
பதுரியா ம.கல்., உயன்வத்த.

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பிவையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவியை நகலெடுக்க புதிய App அறிமுகம்

'ஸ்மார்ட்' போன்களிலுள்ள விசேடமான ஒரு செயலி (எப்ஸ்-app) மூலம் சாவியை நகல் எடுக்கும் வழிமுறையொன்று அறிமுகமாகியுள்ளது.

நியூயோர்க்கிலுள்ள கீமி (keyme) என்ற நிறுவனமே இந்த 'எப்ஸை' அறிமுகப்படுத்தியுள்ளது. இது எப்படி சாத்தியப்படுகின்றது? சாவியை ஃபோன் கெமராவில் புகைப்படம் எடுத்து அதனை இந்த 'எப்ஸ்' (செயலி) மூலம் அனுப்பினால் அந்த சாவிக்கான நகலை உருவாக்கித் தருமாம் இந்த 'கீமி' நிறுவனம்.

வெள்ளைப் பின்னணி இருக்கும் வகையில்தான்




சாவியை புகைப்படம் எடுக்க வேண்டுமாம். சிலவேளை, இன்னொருவரின் சாவியை வேறொருவர் திருட்டுத்தனமாக நகலெடுக்கவும் முடியும் அல்லவா என்ற கேள்வி எழுகின்றதல்லவா? இதற்கும் பாதுகாப்பு முறைகள் இருக்கின்றன. அதாவது, சாவியை நகலெடுக்க அனுப்புபவரின் கைரேகையை பதிவுசெய்வது, ஈமெயில் முகவரியைப் பதிவு செய்வது, கிரெடிட் கார்ட் எண்ணைப் பெற்றுக்கொள்வது ஆகிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் ஏமாற்றுப் பேர்வழிகளிடமிருந்து தப்புவதற்கான வழிமுறைகள் தற்போது கையாளப்படுகின்றன.

# தெரிந்து கொள்வோம்

* இந்து சமய விழிப்புணர்வை ஏற்படுத்திய சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் எப்போது?



ஜனவரி 12 ஆம் திகதி

* இரவிந்திர நாத் தாகூர் நோபல் பரிசு பெறக் காரணமாகிய கீதஞ்சலி நூல் எந்த மொழியில் எழுதப்பட்டது?




வங்க மொழியில்



* 2015 இல் புகைத்தல் நிவாரணம் தொடர்பான சர்வதேச விருதைப் பெற்ற இலங்கையர் ராஜித சேனாரத்ன ஆவார். இதற்கு முன்னர் இவ் விருதைப் பெற்ற இலங்கையர் யார்?

தற்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிரிசேன அவர்கள்



* ஐ.நா. சபை கட்டடத்தை நிர்மாணிக்க நிலம் வழங்கிய கோடீஸ்வரர் யார்?

ஜான் டி.ராக்பெல்லா

* உலகில் 93 நாடுகளில் ஒரே நேரத்தில் வெளியிட்டு விற்பனை செய்யப்பட்ட நூல் எது?




ஹரிபொட்டர்

* 2015 இல் உலகில் மிகப் பெரிய வைரமொன்று பொஸ்வானா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் நிறை என்ன?



*1,111* கரெட்

* கௌதம புத்தர் இலங்கையில் தரிசித்த இடங்களாக பௌத்தர்கள் கருதுமிடங்கள் எவை?



i. சிவனொலிபாதமலை
ii. நயினா தீவு
iii. மகியங்கனை
iv. சித்துல் பவ்வ

* பின்வரும் உபகோள்கள் எந்தக் கோள்களுக்குரியது.

i. டைட்டன் - சனி
ii. நிலா - பூமி
iii. போமோஸ் - செவ்வாய்
iv. கனிமீட் - வியாழன்



* டேவிட் சிலையை செதுக்கிய சிற்பி யார்?

மைக்கல் எஞ்சலோ

தொகுப்பு: உடுவை பரந்தாமன்


## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

* Practical English Learning Software DVD



* 4000 English Letter Writing Software



* 8 GB Pen Drive



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்.....

* ஆங்கில கற்கும் மென்பொருள் DVD
* 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்
* 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்

*03.02.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*
பெப்ரவரி-02
Pen Drive வெற்றியாளர்:
ஆர்.துஷ்யந்தி,
6/3, பாம் கார்டின்,
இரத்தினபுரி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி (17.02.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
17.02.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



பெயர்: ஏ.யூசுப் அஹமட்.
புள்ளிகள்: 162.
பாடசாலை: களு/ ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை, தர்கா நகர்.



பெயர்: எஃப்.அம்ரா.
புள்ளிகள்: 161.
பாடசாலை: கே/தெகி/ நாபாவள மு.ம.வித்தியாலயம்.



பெயர்: எஃப். சம்ஹறா.
புள்ளிகள்: 156.
பாடசாலை: கே/தெகி/ நாபாவள மு.ம.வித்தியாலயம்.



பெயர்: ஏ.முஆத்.
புள்ளிகள்: 154.
பாடசாலை: கே/தெகி/ நாபாவள மு.ம.வித்தியாலயம்.

## கொ/கைரியா முஸ்லிம் பெண்கள் கல்லூரி



பெயர்: ஸுல்ஃபா தல்ஹா.
புள்ளிகள்: 126.



பெயர்: மஹதியா மின்சார்.
புள்ளிகள்: 123.



பெயர்: உஸ்னா அஸ்லின்.
புள்ளிகள்: 123.



பெயர்: மனால்.
புள்ளிகள்: 106.



பெயர்: ஆமீனா ஜமீல்.
புள்ளிகள்: 90.



பெயர்: அஃப்ரா.
புள்ளிகள்: 89.



பெயர்: நஜ்லா பஸுருத்தீன்.
புள்ளிகள்: 88.



பெயர்: சவுதா அலீம்.
புள்ளிகள்: 74.


உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தற்போது லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் அருகாமையில் உள்ள தீவுகளிலும் நுளம்புகளினால் பரவும் சிகா வைரஸ் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகின்றது. இந்த வைரஸ் தொற்று உலகெங்கும் தீவிரமாகப் பரவும் வாய்ப்பு உள்ளதாக நம்பப்படுகின்றது. இந்நோய் உயிர்க்கொல்லி நோயாக இல்லாவிடினும், எபோலா போன்று தொற்றுநோயாக மாறும் என சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு சுற்றுலாப் பயணம் சென்று வந்த பல சுற்றுலாப் பயணிகளுக்கு சிகா வைரஸ் காய்ச்சல் தொற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.





# நுளம்புகளினால் பரவும் 'சிகா' வைரஸ்






## லத்தீன் அமெரிக்காவில் பரவுகின்றது...

தற்போது இந்த சிகா வைரஸ் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நாடுகளில் தீவிரமாகப் பரவி வருகின்றது. கரீபியன் தீவுகளிலும் ஆசிய பிராந்தியத்தினைச் சேர்ந்த சுமோவா தீவு, ஆபிரிக்காவின் கேப் வர்டே குடியரசிலும் சிகா வைரஸ் பரவியுள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இந்த சிகா வைரஸ் மிக வேகமாக இந்நாடுகளில் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## அஞ்சத் தேவையில்லை

தற்போது லத்தீன் அமெரிக்கா நாடுகளில் பரவும் இந்த வைரஸ் இலங்கையில் பரவுவதனைத் தடுப்பதற்கு டெங்கு காய்ச்சலுக்குப் பயன்படுத்திய நடைமுறைகளைக் கொண்டு, வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை விமானநிலையத்தில் விசேட பரிசோதனைகளுக்குட்படுத்துவதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## ஆபத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள்

இந்நோய் தொற்றியவர்களில் 80 சதவீதமானவர்களுக்கு நோய் அறிகுறிகள் தென்படுவதில்லை.





அதுமட்டுமன்றி, இந்த நோய்க்கு மருந்துகளோ, தடுப்பூசிகளோ அதற்குரிய சிகிச்சைகளோ இல்லை. இந்த நோய் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு ஓய்வு அவசியமாகும். சிகா வைரஸ் பற்றி அச்சப்படத் தேவையில்லை. காரணம் இரு வாரங்களில் காய்ச்சல் குறைந்துவிடும். இந்த வைரஸ் குறித்து கர்ப்பிணித் தாய்மார்களே அச்சமடைய வேண்டும். ஏனெனில், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த நோய் தொற்றினால் பிறக்கும் குழந்தை அங்கவீனமடையக் கூடும். இந்த வைரஸ் கருவில் இருக்கும் குழந்தையின் மூளை வளர்ச்சியினை மட்டுப்படுத்துவதனால் தலையின் வளர்ச்சி குறைந்து விடுகின்றது. இதன் காரணமாக, தலைப்பகுதி சிறிதான அமைப்பினைக் கொண்ட பிள்ளைகள் பிறக்கின்றன.

## மந்தியிலிருந்து வந்த வைரஸ்

1974 ஆம் ஆண்டு நுளம்புகளினால் பெருகும் 'மஞ்சள் காய்ச்சல்' பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் கிழக்கு ஆபிரிக்க வைரஸ் ஆய்வுப் பிரிவின் வைரஸ் ஆய்வாளர்கள் உகண்டாவின் என்டெப்பே பிராந்தியத்தின் சிகா என்ற வனாந்தரத்திற்கு சென்றனர். பரிசோதனைகளுக்காகவும் தடுப்பு மருந்தினைப் பரீட்சித்துப் பார்த்த 'ரீசஸ்' ரக மந்திகளில் ஒரு மந்தி காய்ச்சலினால் அவதியுற்றிருந்ததாக ஆய்வுகளில் தெரிய வந்தது. அந்த மந்தியினை தனிமைப்படுத்தி பல பரிசோதனைகளை மேற்கொண்டபோது அதன் உடலில் வைரஸ் இருந்தமை இனங்காணப்பட்டது.

அது ஒரு புதிய வைரஸாக இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வைரஸ் குறித்து பரிசோதனை பற்றிய தரவுகள் அனைத்தும்



கிழக்கு ஆபிரிக்கா வைரஸ் ஆய்வுப் பிரிவுக்கு சொந்தமாக உள்ளது.

## சிகா


சிகா வனாந்தரத்திலிருந்து அறியப்பட்டமையினால் அதனை 'சிகா வைரஸ்' என்று கூறுகின்றனர். 'சிகா' என்பதன் பொருள் 'அளவுக்கு மீறிய வளர்ச்சி' என்பதாகும். குறிப்பாக, இந்த வைரஸ் ஆபிரிக்கா உட்பட, வெப்பவலய நாடுகளில் பாதிப்பினை ஏற்படுத்தி வந்தது. 1954 இல் ஆபிரிக்காவில் இந்த வைரஸ் தொற்று பரவியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப் பிரிவு
யாழ்ப்பாண பொதுநூலகம்



# நீரை சுவைத்து அருந்திடலாம்









இஸ்ரேலிய தொழிலதிபரான ஐசாக் லாவி என்பவர் 'ரைட் கப்' என்ற பெயரில் பழங்களின் நறுமணம் கலந்த ப்ளாஸ்டிக் குவளைகளை தயாரித்துள்ளார். எலுமிச்சை, தோடை, பெர்ரி, அப்பிள் என நான்கு வகையான பழங்களின் நறுமணங்களை தரும் வகையில் இந்த குவளைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நீர் அருந்த அதிகம் விரும்பாதவர்களும் நீரிழிவு நோய் காரணமாக இனிப்புப் பானங்கள் அருந்த முடியாமல் தவிப்பவர்களும் இந்த ரைட் கப்பில் நீரை அருந்தும்போது, அதிலிருந்து வரும் நறுமணம் காரணமாக, சுவையான பானம் அருந்துவது போன்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த குவளையொன்றின் பாவனைக் காலம் 6 மாதங்கள் ஆகும். அதன் பின்னர் புதிய குவளையை வாங்கிப் பயன்படுத்த வேண்டும். இந்த குவளைகளில் நீரை அருந்துவதன்மூலம் உடலுக்கு எந்தவொரு தீங்கும் ஏற்பட மாட்டாது என ஐசாக் லாவி தெரிவித்துள்ளார்.

# மனிதனும் பயணமும்

ஒவ்வொருவரும் தினமும் சராசரியாக 1 மணித்தியாலம் 6 நிமிடங்களை பயணத்திற்காக செலவழிப்பதாகக் கூறப்படுகின்றது. வருடத்திற்கு ஒவ்வொருவரும் சராசரியாக 12 ஆயிரம் கிலோ மீற்றர் பயணம் செய்கிறார்கள். உலக அளவில் நாளொன்றிற்கு 53 சதவீதம் பேர் கார்களிலும் 26 சதவீதம் பேர் பஸ்களிலும் 9 சதவீதம் பேர் ரயிலிலும் மேலும் 9 சதவீதம் பேர் விமானங்களிலும் 3 சதவீதம் பேர் சைக்கிள்களிலும் பயணிக்கின்றனர்.

2050 ஆம் ஆண்டாகும்போது, அதிவேக வாகனங்களின் பயன்பாடு அதிகமாக இருக்கும் என்பதால், அப்போது ஒரு நாளில் ஒருவர் நடந்து பயணம் செய்யும் நேரம் 12 நிமிடங்களாகக் குறைந்துவிடும். அக்காலகட்டத்தில் மக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளுக்காக அதிகமாக வாகனங்களையே பயன்படுத்துவர் என ஆய்வொன்றின்மூலம் தெரியவந்துள்ளது.




## சஹாராவின் கண்




மொரிடானியா நாட்டுக்குட்பட்ட தெற்கு சஹாரா பாலைவனப் பகுதியிலேயே 'சஹாராவின் கண்' (Eye of Sahara) எனப்படும் இந்த இடம் அமைந்துள்ளது. ஏறத்தாழ 30 மைல் தூர வட்டமான தோற்றத்தைக் கொண்டுள்ள இந்த இடத்தை வானில் இருந்து பார்க்கும்போது, கண் வடிவில் இருப்பதாலேயே இதை 'சஹாராவின் கண்' என கூறுகின்றனர்.

# இவ்வார கார்ட்டூன் படம்





இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, பெப்ரவரி 17 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 17, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org